## (ஏ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்[1]

இறக்குமதிப் பொருட்களிற் செய்யப்பட்ட கடுமையான கட்டுப்பாடு, பண்ட மாற்றல்களிலுள்ள பாதகமான நிலுவையை வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கும், உதவிகளுக்கும் ஏற்பக் கட்டுப்படுத்த மீளவும் உதவிபுரிந்தது. வணிகப் பொருட் கணக்கிலான குறை ரூ. 3,020 இலட்சமாகும். வெளிநாட்டு அரசாங்கங்களினல் வழங்கப்பட்ட கொடைகள், நடைமுறைக் கணக்கிலிருந்த குறையை ரூ. 2,690 இலட்சமாகக் குறைக்க உதவிபுரிந்தன. நடைமுறைக் கணக்கிலுள்ள குறையை ஈடுசெய்வதற்கு முக்கியமாக பண்ட, செயற்றிட்ட வடிவில் பெற்ற ரூ. 2,940 இலட்சங்கொண்ட தேறிய நீண்டகால முதல் போதியளவினதாக இருந்தது. இதன் விளைவாக, ''அடிப்படை நிலுவையில்''[2] திரும்பவும் ரூ. 250 இலட்சம் மிகை காணப்பட்டது.

எவ்வாருயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1972ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையின் செயலாற்றம் ஏமாற்றமளிக்கக்கூடியதாக இருந்தது. 1971ஆம் ஆண்டில், ''அடிப்படை நிலுவையிலான'' மிகை ரூ. 1,880 இலட்சமாக இருந்தது. குறிப்பாக நோக்குமிடத்து, உள்வரும் உதவிகள் குறைவடைந்தமையினலேயே அடிப்படை நிலுவைகள் மோசமான நிலையை அடைந்தன. கொடைகளினது பெறுமதி ரூ. 240 இலட்சத்தால் வீழ்ச்சியுற, தேறிய உள்வரும் நீண்டகால உதவி ரூ. 1,110 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது இதன் விளைவாக, 1971ஆம் ஆண்டைப்போலன்றி, கொடுப்பனவுகளுக்கு நிதிஉதவி செய்வதற்குக் குறுங்காலக் கொடுகடன்களில் நாடு தங்கியிருத்தலைக் குறைப்பதற்கு முடியவில்லை.

1971ஆம் ஆண்டிலும் பார்க்க, 1972ஆம் ஆண்டின் செயலாற்றம், திருப்தி யற்றதாகக் காணப்பட்டதோடல்லாமல், மற்றைய கவலைதரும் பண்பு என்னவெனில், சென்மதி நிலுவைகளின் நீண்ட கால வலுவின்மைக்குப் பொறுப்பான காரணிகள் தொடர்ந்தும் தாமாகப் பெருகத் தொடங்கின. இலங்கையின் இறக்குமதிகளுக்கான விலைகள், பெருமளவு இலங்கையின் கட்டுப் பாட்டிற்கு அப்பாலுள்ள காரணிகளாற்ருன் கட்டுக்கடங்காத அளவில் அதிகரித்துச் செல்கின்றன.

---

1. 1972ஆம் ஆண்டு இறுதிக் காலாண்டுப் பகுதியில், வர்த்தக வங்கிகளிலேற்பட்ட நீண்டகால வேலை நிறுத்தத்தின் காரணமாக, சென்மதி நிலுவையினை மதிப்பிடுவதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து வேறுபட்ட முறைகள், பின்பற்றப்பட்டமை இங்கு குறிப்பிடல் வேண்டும். முன்னைய ஆண்டுகளில் சென்மதி நிலுவைபற்றிய மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகள் பற்றிய முழுத் தகவல்களும் கிடைக்கப்பெற்றன. அத்தகைய விளக்கமான தகவல்கள், இவ்வறிக்கை எழுதுகின்றபோது, 1972ஆம் ஆண்டு முதலரைக் காலாண்டுப் பகுதிக்கு மாத்திரமே கிடைத்தன. தகவல் குறைவுகள் ஊகித்து எறிவு செய்தல் வாயிலாக நிரப்பப்படவேண்டும். 1972ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீடுகள் பெருமளவுக்குத் தற்காலிகமானவையாகக் கருதப்படல் வேண்டும்.

2. தேறிய நீண்ட கால மூலதனக் கிடைப்பனவுகளுக்கு எதிராக, நடைமுறைக் கணக்கு மீதியை எதிரீடு செய்வதன் மூலமே அடிப்படை நிலுவை பெறப்பட்டது.

## அட்டவணை II (ஏ) 1

## இலங்கையின் சென்மதி நிலுவைகள்

| ஆண்டு | வர்த்தக நிலுவை | மாற்றற் கொடுப் பனவுகளையும் உள்ளடக்கிய தேறிய கட்புலனாகாதவை | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவைகள் | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1957 | — 95 | —100 | —195 | — 18 | —213 |
| 1958 | — 89 | — 64 | —153 | + 8 | —145 |
| 1959 | —183 | — 25 | —208 | + 32 | —176 |
| 1960 | —210 | — 11 | —221 | + 22 | —199 |
| 1961 | — 86 | — 7 | — 93 | + 11 | — 82 |
| 1962 | —143 | + 3 | —140 | + 39 | —101 |
| 1963 | —161 | — 7 | —168 | + 80 | — 88 |
| 1964 | —193 | + 33 | —160 | + 8 | —152 |
| 1965 | — 13 | + 72 | + 59 | + 58 | +117 |
| 1966 | —344 | — 53 | —290 | +137 | —153 |
| 1967 | —335 | + 46 | —289 | +161 | —128 |
| 1968 | —380 | + 25 | —355 | +224 | —131 |
| 1969 | —746 | — 51 | —797 | +275 | —522 |
| 1970 | —315 | — 35 | —350 | +184 | —166 |
| 1971 | —287 | + 71 | —216 | +404 | +188 |
| 1972(அ) | —302 | + 33 | —269 | +294 | + 25 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி

பின்வருவன அதற்குப் பொறுப்பான காரணங்களாகும்

(அ) முன்னேற்றமடைந்த நாடுகளிலேற்பட்ட கூலி-விலைப் பண வீக்கம், இலங்கையினது தயாரிக்கப்பட்ட பொருள் இறக்குமதி விலைகளை உயர்த்தியமை.

(ஆ) எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் தமது பெற்றோலிய ஏற்றுமதி களுக்குக் கூடிய விலைகள் பெறுவதற்காக ஏற்படுத்திய வெற்றிகரமான தாக்கம் பெற்றோலியப் பொருட்களின் விலைகளிற் கூரிய அதிகரிப்புக்களை விளைவித்தமை.

(இ) ஆண்டு முழுவதும் பற்ருக்குறை நிலையிலிருந்த சீனி, இறுதிக் காலாண்டிற் பற்ருக்குறை நிலையிலிருந்த அரிசி, கோதுமை போன்ற சில உணவுப் பொருட்களின் அதிகரித்த விலைகள்.

(ஈ) இலங்கை, தனது இறக்குமதிகளின் நிதிக்காகக் கூடியளவில் குறுந்-தவணை, நீண்ட-தவணைக் கடன்களிலே தங்கியிருப்பதும், இதனுல் மிக மலிந்த மூலங்களிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஆற்றலைக் குறைத்தமையும்.

இறக்குமதி விலைகளிலேற்பட்ட நிலையான அதிகரிப்பு இலங்கையின் வெளி நாட்டு வளங்களின் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக் கையில், சென்ற சில ஆண்டுகளாகப் புதிய நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இலங்கையின் முன்னைய கடன்பாடுகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், 1972ஆம் ஆண்டில் இதன் ஏற்றுமதி வருவாய்களில் 6 சதவீதத்திற்கு மேலான தொகைக்கு வகைகூறின. நீண்ட தவணைக் கடனின் மூலதன மீளக்கொடுப் பனவுகளுக்காக இன்னெரு 6 சதவீதம் தேவைப்பட்டது. அத்துடன் புதிதாகக் கடன் பெறுவதினுல் பெருமளவு குறுந்-தவணைக் கடன்களுக்குத் திரும்பவும் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சென்ற சில ஆண்டுகளாக ஏற்றுமதி வருமானங்களில் அவதானிக்கப்பட்ட தேக்க நிலை, நீண்ட தவணை நோக்கில் கூடிய கவலைதரும் நிலைமையாக அமைந்துள்ளது. ரூபா நியதிகளின்படி 1972இன் ஏற்றுமதி வருமானங்களில் 1.6 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது; ஆனுல் இதற்குச் செலாவணி வீதங்களிலேற்பட்ட சீராக்கங்களே பெருமளவு காரணமாகும். வெளிநாட்டு நாணய நியதிகளின்படி, ஏற்றுமதிப் பெறுகையில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் முதன்மைக் காரணம் தேயிலை ஏற்றுமதி அளவிலேற்பட்ட வீழ்ச்சியே யாகும். 1971ஆம் ஆண்டில் கிளர்ச்சி நடவடிக்கைகளினுல் ஏற்பட்ட குழப்பங்கள் உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமாகவிருக்கையில், 1972ஆம் ஆண்டில் பாதகமான காலநிலை ஓரளவுக்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஆயினும் உற்பத்தியாளர்கள் தம் தொழிற்பாட்டுச் செலவுகளைச் சிக்கனமாக்குவதற்கு எடுத்த முயற்சிகளே தேயிலை, றப்பர் ஏற்றுமதிகளின் அளவிலேற்பட்ட வீழ்ச்சிக்கு ஓரளவு காரண மாயமைந்ததென்பதற்குச் சான்றுண்டு. 73.1 சதவீத ஏற்றுமதி வருமானங்களுக்கு வகைகூறும் இவ்விரு கைத்தொழில்களில் இலங்கை தங்கியிருப்பதை நோக்கும் போது, இது கவலைதரும் போக்கொன்றைக் காட்டுகின்றதென்பது தெளிவாகும்.

1972இன் செயலாற்றத்தின் நம்பிக்கையின்மைக்குரிய இன்னெரு காரணம், இது புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டாக விளங்கியமையோகும். நாடொன்று இறக்குமதிப் பதிலீட்டிலேயே முற்ருகத் தங்கியிருக்கவேண்டு மென்னும் நீண்ட-தவணைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை இலங்கையின் சூழ்நிலைகளில் நோக்கும்போது, ஐந்தாண்டுத் திட்டம் ஏற்றுமதிகளின் துரித அபிவிருத்திகளிலேயே குறிப்பிடத்தக்களவு வலியுறுத்தலைச் செய்துள் ளது. ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மொத்த ஏற்றுமதி வருமானங்கள் ரூ. 27,100 இலட்சமாக அதிகரிக்குமென ஊகிக்கப்படுகிறது. ஏற்றுமதி வருமானங்கள் பற்றிய ஆண்டு இலக்குகள் வரையறை செய்யப்படவில்லை.

ஆனல் ஏற்றுமதி வருமானங்களிற் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படாத ஆண்டொவ்வொன்றையும் கவனத்திற்கெடுக்காதுவிடின், 1976 இறுதியில் ரூ. 2,710 இலட்சங்கொண்ட வருமானத்தைப் பெறும் செயல், கூடிய கடினமாகவிருக்கும். ஐந்து-ஆண்டுத் திட்டத்தில் எண்ணமிடப்பட்ட முதலீட்டின் நிதியுதவல், தேவையான வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பதிலேயே தங்கியிருப்பதால் ஏற்றுமதி இலக்குகளிலேற்படக்கூடிய வீழ்ச்சி இத்திட்டத்தின் வெற்றிக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

இந்நிலைமையினல், முக்கியமற்ற நுகர்வு இறக்குமதிகளில் தடுக்கமுடியாத நிலையில் மேலும் கட்டுப்பாட்டை விதிப்பதோடு ஏற்றுமதிகளுக்குக் கூடிய ஊக்குதல் அளிக்கும் முறையில் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இவ்விரு துறைகளிலும் 1972ஆம் ஆண்டில் சிறு முன்னேற்றம் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1971 ஓகத்தில் மிதக்கவிட்டவேளையில், வழமைபோன்று ரூபாவின் செலாவணி வீதத்தைப் பவுண்டு ஸ்ரேலிங்குடன் நிலையான முறையில் நிர்ணயிக்கப்பட விடுவதா அன்றி ஐக்கிய அமெரிக்க டொலருடன் புதிய தொடர்பை ஏற்படுத்துவதா என்பதை இலங்கை அரசாங்கம் தீர்மானிக்கவேண்டியிருந்தது. பவுண்டுடன் தொடர்பை வைத்திருப்பதற்கான முக்கிய காரணம் ஸ்ரேலிங் பிரதேசங்களுடன் இலங்கைக்குக் கணிசமானளவு வர்த்தகத் தொடர்பிருக்கின்றதென்பதனலாகும். ஸ்ரேலிங்குடன் இணைப்பதனல் எற்றுமதிகளின் ரூபாப் பெறுகைகளை நிலையாக வைத்திருக்கவும், ஸ்ரேலிங் பிரதேசங்களிலிருந்து பெறும் இறக்குமதிகளுக்கு ரூபாக்களில் கொடுப்பனவு செய்வதற்கும் உதவியாயிருக்கும். இதேவேளையில், டொலருடன் இணைப்பதற்காக இன்னும், கூடிய வலுப்பெற்ற காரணங்கள் இருந்திருக்கின்றன. டொலரை மிதக்க விட்டதையடுத்து டொலரின் பெறுமதி ஸ்ரேலிங்கிலும் கீழ் இறங்கி, ரூபாவிற்கும் பவுண்டிற்கு மிடையில் ஒரு நிலையான தொடர்பை ஏற்படுத்தி, டொலருக்கு எதிராக ரூபாவை மீள மதிப்பிடும் நிலையை ஏற்படுத்தியிருக்கும். டொலர்ப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிகளுக்குக் குறைந்தளவு ரூபாக்களைப் பெறுகையில், டொலர்ப் பிரதேசங்களிலிருந்து பெறும் இறக்குமதிகள் ரூபாக்களில் மலிவாக இருந்திருக்குமென்பது இதன் விளைவுகளாகும். இவ்விளைவுகளில் எதுவென்ருலும் சென்மதி நிலுவையைப் பொறுத்தவரை விரும்பத்தக்கதல்ல. ரூபாவை டொலருடன் இணைப்பதற்கான இன்னெரு முக்கிய காரணம் ஏற்றுமதிச் சந்தைகளில் இலங்கையுடன் போட்டியிடும் பல்வேறு நாடுகள் டொலருடன் இணைந்துள்ளமையேயாகும். இவ்விடயங்கள் நாணயச் சபையின் ஆழ்ந்த கவனத்திற்குட்பட்டுள்ளதுடன், 1971 நவெம்பரில் செலாவணி வீதத்தை டொலருடன் மீள இணைப்பதற்கான முடிவும் எடுக்கப்பட்டது. சிமித்ஸோலியன் உடன்படிக்கையுடன் ஐக்கிய அமெரிக்க டொலரின் மிதப்பு முடிவடைந்ததுடன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் ரூபாவிற்கும் இடையில் மிதப்பிற்கு முன்னிருந்த தொடர்பின் அடிப்படையில் புதிய செலாவணி வீதங்கள் அமைக்கப்பட்டன.

## சென்மதி நிலுவைகள்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | |
|---|---|---|---|
| | | 1971 | |
| | வரவு | பற்று | தேறிய |
| **1. வணிகப் பொருள் கணக்கு** | | | |
| ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) ... | 1930 | | |
| இறக்குமதிகள் (கொ.கா.க.) (சொந்த வளங்கள்) ... | | 1708 | |
| (உதவி இறக்குமதிகளும் நிரம்பல் செய்வோர் கொடுகடன்களும்) ... | | 509 | |
| மொத்த இறக்குமதிகள் ... | | 2217 | |
| வர்த்தக நிலுவை (சொந்த வளங்கள்) ... | | | (+ 222) |
| வர்த்தக நிலுவை (எல்லா இறக்குமதிகளும்) ... | | | — 287 |
| **2. பணிகள் கணக்கு** | | | |
| நாணயமல்லாத் தங்கம் .. | — | — | — |
| துறைமுகப் பணிகள் ஏற்றியிறக்கற் காப்புறுதி .. | 139 | 43 | + 96 |
| வெளிநாட்டுப் போக்குவரத்து ... | 20 | 15 | + 5 |
| முதலீட்டு வருமானம் ... | 13 | 134 | — 121 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | 30 | — 29 |
| (ii) ஏனைய (வட்டி) ... | 12 | 104 | — 92 |
| அரசாங்கச் செலவு ... | 35 | 24 | + 11 |
| பல்வகைப் பணிகள் ... | 106 | 111 | — 5 |
| தனியார் மாற்றல்கள் ... | 20 | 40 | — 20 |
| மொத்தப் பணிகள் ... | 333 | 367 | — 34 |
| **3. மொத்த நடைமுறைக் கணக்குகள்** (சொந்த வளங்கள்) ... | (2263) | (2075) | (+ 188) |
| மொத்த நடைமுறைக் கணக்குகள் (எல்லா விடயங்களும்) ... | 2263 | 2584 | — 321 |
| **4. மூலதனக் கொடுப்பனவுகள்** ... | | 1051 | — 1051 |
| கடன்கள் .. | — | 96 | — 96 |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | — | 65 | — 65 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | — | 614 | — 614 |
| எண்ணெய் நட்ட ஈடும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ... | — | 10 | — 10 |
| தனியார் மூலதனம் ... | — | 36 | — 36 |
| ப. நா. நி. ... | — | 145 | — 145 |
| வங்கிக் கடன்பாடு ... | — | 81 | — 81 |
| ஏனைய .. | — | 4 | — 4 |
| மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் (சொந்த வளங்கள்) .. | — | — | (— 863) |
| மொத்த நடைமுறை, மூலதன கொடுப்பனவுகள் (எல்லா விடயங்களும்) ... | | | — 1372 |
| **5. நிதியீட்டல்** | | | |
| ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 83 | — | + 83 |
| வங்கிக் கடன்பாடுகள் ... | — | — | — |
| இருபுடை நிலுவைகள் .. | — | 57 | — 57 |
| நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் ... | 58 | — | + 58 |
| குறுந்தவணைக் கொடுகடன்கள் ... | 658 | — | + 658 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | — | 96 | — 96 |
| பண்ட உதவி ... | 260 | — | + 260 |
| செயற்றிட்ட, ஏனைய உதவி ... | 86 | — | + 86 |
| ஏனைய உதவி ... | 152 | — | + 152 |
| கொடைகள் ... | 105 | — | + 105 |
| தனியார் மூலதனம் ... | 25 | — | + 25 |
| ஏனைய ... | 41 | — | + 41 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 63 | — | + 63 |
| பிழைகளும் தவறுகளும் ... | — | 6 | — 6 |
| மொத்த நிதியீட்டல் ... | 1531 | 159 | + 1372 |

(அ) தற்காலிகமானவை.

எண் தொகைகள் கிட்டிய எண் தொகைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1971—1972

| பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பத்து இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1972 (அ) | | | 1971 | | | 1972 (அ) | | |
| வரவு | பற்று | தேறிய | பற்று | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 1963 | | | 324 | | | 318 | | |
| | 1697 | | | 287 | | | 275 | |
| | 568 | | | 85 | | | 92 | |
| | 2265 | | | 372 | | | 367 | |
| | | (+ 266) | | | + 37 | | | (+ 43) |
| | | — 302 | | | — 48 | | | — 49 |
| — | — | — | — | — | — | — | — | — |
| 140 | 45 | + 95 | 23 | 7 | + 16 | 23 | 7 | + 16 |
| 30 | 13 | + 17 | 4 | 3 | + 1 | 5 | 2 | + 3 |
| 12 | 149 | — 137 | 2 | 22 | — 20 | 2 | 24 | — 22 |
| 1 | 29 | — 28 | — | 5 | — 5 | — | 5 | — 5 |
| 11 | 120 | — 109 | 2 | 17 | — 15 | 2 | 19 | — 17 |
| 40 | 28 | + 12 | 6 | 4 | + 2 | 7 | 4 | + 3 |
| 126 | 128 | — 2 | 18 | 19 | — 1 | 20 | 21 | — 1 |
| 25 | 59 | — 34 | 3 | 7 | — 4 | 4 | 10 | — 6 |
| 373 | 422 | — 49 | 56 | 62 | — 6 | 61 | 68 | — 7 |
| (2336) | (2119) | (+ 217) | (380) | (349) | (+ 31) | (379) | (343) | (+ 36) |
| 2336 | 2687 | — 351 | 380 | 434 | — 54 | 379 | 435 | — 56 |
| | 952 | — 952 | — | 176 | — 176 | — | 155 | — 155 |
| — | 124 | — 124 | — | 16 | — 16 | | 20 | — 20 |
| — | 50 | — 50 | — | 11 | — 11 | | 8 | — 8 |
| — | 570 | — 570 | — | 103 | — 103 | | 93 | — 93 |
| — | — | — | — | 2 | — 2 | | — | — |
| — | 38 | — 38 | — | 6 | — 6 | | 6 | — 6 |
| — | 170 | — 170 | — | 24 | — 24 | | 28 | — 28 |
| — | — | — | — | 14 | — 14 | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — |
| — | | (— 735) | | | (— 145) | | (119) | (— 119) |
| | | (— 1303) | | | — 230 | | 211 | — 211 |
| 163 | — | + 163 | 14 | — | + 14 | 27 | — | + 27 |
| 12 | — | + 12 | — | — | — | 2 | — | + 2 |
| — | 11 | — 11 | — | 10 | — 10 | — | 2 | — 2 |
| 72 | — | + 72 | 10 | — | + 10 | 12 | — | + 12 |
| 593 | — | + 593 | 111 | — | + 111 | 96 | — | + 96 |
| — | 229 | — 229 | — | 16 | — 16 | — | 37 | — 37 |
| 317 | — | + 317 | 44 | — | + 44 | 51 | — | + 51 |
| 97 | — | + 97 | 14 | — | + 14 | 16 | — | + 16 |
| — | — | — | 25 | — | + 25 | — | — | — |
| 82 | — | + 82 | 18 | — | + 18 | 13 | — | + 13 |
| 51 | — | + 51 | 4 | — | + 4 | 8 | — | + 8 |
| 88 | — | + 88 | 7 | — | + 7 | 14 | — | + 14 |
| 62 | — | + 62 | 10 | — | + 10 | 10 | — | + 10 |
| 6 | — | + 6 | — | 1 | — 1 | 1 | — | + 1 |
| 1543 | 240 | + 1303 | 257 | 27 | + 230 | 250 | 39 | 211 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஏ) 3

## வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்கள் 1969 | 1970 | 1971 | 1972 (அ) | சதவீதப் பங்கு 1969 | 1970 | 1971 | 1972 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) வளங்கள்** | | | | | | | | |
| 1. **வணிகப் பொருள் ஏற்றுமதிகள்** க. ஏ. பெ. | 1,909 | 2,017 | 1,930 | 1,963 | 56 | 58 | 51 | 51 |
| 2. **பணிகள் கணக்கு** | 269 | 234 | 333 | 373 | 8 | 7 | 9 | 10 |
| 3. **மூலதன உட்பாய்வு** | | | | | | | | |
| **அவற்றில்:—** | 417 | 382 | 628 | 547 | 12 | 11 | 16 | 14 |
| (அ) கடன்கள் 1 | 362 | 299 | 346 | 414 | 11 | 9 | 9 | 11 |
| (ஆ) ஏனைய உதவிகள் 2 | — | — | 152 | — | — | — | 4 | — |
| (இ) கொடைகள் 1 | 46 | 75 | 105 | 82 | 1 | 2 | 3 | 2 |
| (ஈ) தனியார் மூலதனம் | 9 | 8 | 25 | 51 | — | — | — | 1 |
| 4. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** | 715 | 829 | 903 | 990 | 21 | 24 | 24 | 25 |
| (அ) ப. நா. நி. இருந்து மொத்த எடுப்பனவுகள் | 77 | 57 | 83 | 163 | 2 | 2 | 2 | 4 |
| (ஆ) சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | — | 78 | 63 | 62 | — | 2 | 2 | 2 |
| (இ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த மிகுதிகளில் அதிகரிப்பு | 18 | — | — | — | 1 | — | — | — |
| (ஈ) வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கடன்பாடுகள் | 227 | 123 | — | 12 | 7 | 4 | — | — |
| (உ) குறுந்தவணைக் கொடுகடன்கள் | 185 | 434 | 658 | 593 | 5 | 13 | 17 | 15 |
| (ஊ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் | 176 | 85 | 58 | 72 | 5 | 2 | 2 | 2 |
| (எ) ஏனைய | 32 | 52 | 41 | 88 | 1 | 1 | 1 | 2 |
| 5. **வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | 90 | — | — | — | 3 | — | — | — |
| மொத்தம் | 3,399 | 3,462 | 3,794 | 3,873 | 100 | 100 | 100 | 100 |
| **(ஆ) பயன்பாடு** | | | | | | | | |
| 6. **வணிகப் பொருள் இறக்குமதிகள்** கொ. கா. க. | 2,655 | 2,332 | 2,217 | 2,265 | 78 | 67 | 58 | 58 |
| அவற்றின் உதவிகள் | 581 | 459 | 509 | 568 | 17 | 13 | 13 | 15 |
| 7. **பணிகள் கணக்கு** | 366 | 364 | 367 | 422 | 11 | 11 | 10 | 11 |
| (அ) முதலீட்டு வருமானம் | 120 | 152 | 134 | 149 | 4 | 4 | 3 | 4 |
| (ஆ) புலப் பெயர்வாளர் மாற்றல்கள் | 15 | 23 | 40 | 59 | 1 | 1 | 1 | 2 |
| (இ) வட்டிக் கொடுப்பனவுகள் | 10 | 100 | 104 | 120 | 2 | 3 | 3 | 3 |
| 8. **மூலதனக் கடனழித்தல்** | 87 | 126 | 132 | 162 | 2 | 3 | 3 | 4 |
| (அ) அலுவலகக் கடமை சார்ந்த | 77 | 113 | 96 | 124 | 2 | 3 | 2 | 3 |
| (ஆ) தனியார் | 10 | 13 | 36 | 38 | — | — | 1 | 1 |
| 9. **குறுந்தவணைப் பொறுப்புக்கள்** | 305 | 605 | 976 | 801 | 9 | 18 | 26 | 21 |
| (அ) ப. நா. நி. நிதியிலிருந்து மீளக் கொள் வனவுகள் | 87 | 161 | 145 | 170 | 3 | 5 | 4 | 4 |
| (ஆ) இருபுடைக் கொடுப்பனவு உடன்படிக்கையிலுள்ள மீதிகளில் குறைவு | — | 75 | 57 | 11 | — | 2 | 2 | — |
| (இ) வங்கிக் கடன்பாடுகள் | — | — | 81 | — | — | — | 2 | — |
| (ஈ) குறுந்தவணைக் கொடுகடன்கள் | 147 | 282 | 614 | 570 | 4 | 8 | 16 | 15 |
| (உ) நிரம்பல் செய்வோர் கொடுகடன்கள் | 50 | 80 | 65 | 50 | 1 | 3 | 2 | 2 |
| (ஊ) ஏனைய | 21 | 7 | 14 | — | 1 | — | — | — |
| 10. **வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புக்கள் (ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களைக் கழித்து)** | — | 39 | 77 | 183 | — | 1 | 2 | 5 |
| 11. **சமப்படுத்தும் விடயங்கள்** | — 14 | — 4 | + 25 | 40 | — | — | 1 | 1 |
| மொத்தம் | 3,399 | 3,462 | 3,794 | 3,873 | 100 | 100 | 100 | 100 |

(அ) தற்காலிகமானவை.
1 செயற்றிட்ட உதவிகளாகவும், பண்ட உதவிகளாகவும் பெறப்பட்ட உதவிகளை உள்ளடக்குகின்றது.
2 மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெறப்பட்டதான பணக் கடன்.
எண் தொகைகள், கிட்டிய முழு எண்களுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பவுண்டு ஸ்ரேலிங்கை 1972 யூனில் மிதக்கவிட்டதும் இம்முடிவுகளை மீளப் பார்வையிடும் தேவை ஏற்பட்டது. ரூபாவைப் பவுண்டு ஸ்ரேலிங்குடன் இணைப்பதற்கான முந்திய எல்லாக் காரணங்களும் இன்னும் வலுப்பெற்றதாக இருக்கின்றன. அத்துடன் ரூபாவைப் பவுண்டுடன் மீள-இணைக்கத் தவறினுல், ஸ்ரேலிங் பிரதேசத்துடனுன இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் மிகவும் பாதிக்கப்படுமென்பதனைக் கவனத்திற்கெடுக்கவேண்டும். இதன் விளைவாக 1972 யூலை 8இல் ரூபாவிற்கான செலாவணி வீதங்கள் பவுண்டு ஸ்ரேலிங்குடன் நிலையான தொடர்பு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டன. முக்கிய நாணயத்திற்கெதிராக ரூபாவை மீள மதிப்பீடு செய்வதற்கு இலங்கைச் சென்மதி நிலுவை நிலை இடமளிக்கவில்லை. எனினும், நடைமுறைப்படுத்தப்பட்ட இம்முடிவுகள் முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவில் மறைமுகமான முறையில் சிறிதளவு மதிப்பிறக்கத்தை விளைவித்தன. இம்மதிப்பிறக்கம் உள்நாட்டு ஏற்றுமதிகளுக்கு (குறிப்பாக வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் தேவைப்படாத ஏற்றுமதிகளுக்கு) மிகவும் தேவையான நிவாரணம் அளித்திருக்கையில், இறக்குமதிகளின் கேள்வியைத் தடுப்பதற்கும் சிறியளவில் உதவிபுரிந்துள்ளது.

புதிய வரவுசெலவுத்திட்டத்தில் சென்மதி நிலுவைகளைப் பாதிக்கும் இரு முக்கிய நடவடிக்கைகள் புகுத்தப்பட்டன- இவையாவன;—

(அ) வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் வீதம் 55 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமை.

(ஆ) முன்னர் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களிலிருந்து விலக்கப்பட்ட பல்வகை இறக்குமதிகளை இச்சான்றிதழ்களுக்குக் கீழ் உட்படுத்தியமை.

இவ்விரு நடவடிக்கைகளும், இறக்குமதிகளுக்கான கேள்வியை நியாயமான அளவிற்குள் வைத்திருக்க உதவுவதுடன் வழமையற்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கு மேலுமொரு தூண்டுதலை அளிக்கும்.

இலங்கையின் சென்மதி நிலுவைகள், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் பற்றிய விவரமான புள்ளிவிவரங்கள் அட்டவணைகள் 11 (ஏ) 2இலும், (ஏ) 3 இலும், பின்னிணைப்பு 11 இலும் தரப்பட்டுள்ளன. சென்மதி நிலுவைகளின் முக்கிய விடயங்கள் கீழே விவரமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### (அ) வணிகப் பொருட் கணக்கு

1971ஆம் ஆண்டு வணிகப் பொருட் கணக்கிலுள்ள ரூ. 2,870 இலட்சங் கொண்ட பாதகமான நிலுவை 1972இல் ரூ. 3,020 இலட்சத்துக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி அளவில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும், இறக்குமதிச் செலவு 1971ஆம் ஆண்டின் ரூ. 2,218 இலட்சத்திலிருந்து 1972ஆம் ஆண்டு 2.1 சதவீதத்தால் ரூ. 2,265 இலட்சங்கொண்ட மதிப்பிடப்பட்ட தொகைக்கு உயர்வுற்றமை இப்பெருமளவு பணக் குறைக்குக்

காரணமாகும். ஏற்கெனவே, குறிக்கப்பட்டவாறு செலாவணி வீதங்களைச் சீராக்கம் செய்தமையின் விளைவாக இறக்குமதிகள் ரூபாக் கணக்கில் அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டமையால் இச்செலவில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கையில், இறக்குமதிகளின் வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட மேலுமோர் உயர்வு இச்செலவிற்கு ஓரளவுக்குக் காரணமாக விளங்கியது.

ஏற்றுமதி வருமானங்கள் ரூ. 19,300 இலட்சத்திலிருந்து 1.6 சதவீதத்தால் ரூ. 19,630 இலட்சத்திற்கு அதிகரித்தன. ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குச் செலாவணி வீத மாற்றங்களே முதன்மைக் காரணமாகும். ஆயினும், ஏற்றுமதி வருமானங்கள் முக்கியமாக, அளவுக் குறைவினால் வெளிநாட்டு நாணய நியதிகளின்படி 1.9 சதவீதத்தால் குறைவுற்றன.

### (ஆ) பணிகளும் மாற்றல்களும்

பணிக் கணக்குப்பற்றிய மதிப்பீடுகள் அட்டவணை 11 (ஏ) 4இலே தரப்பட்டுள்ளன. சென்ற ஈராண்டுகளாகப் பணிக்கணக்கிலுள்ள பணக்குறையிற் கூரிய வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. 1971இல் பணிக் கணக்கிலுள்ள பணக்குறை, சென்றாண்டின் ரூ. 1,020 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 140 இலட்சத்தாற் குறைக்கப்பட்டுள்ளது. 1972இல் 1971ஐப் போன்றே பணக்குறை அதேயளவில் இருந்தது.

கிளர்ச்சி நடவடிக்கைகளினால் 1971ஆம் ஆண்டு சிறு வீழ்ச்சியடைந்த சுற்றுலாவிலிருந்து பெற்ற வருவாய்கள் புத்துயிர்விற்கான தெளிவான அறிகுறிகளைக் காட்டின. இவ்வருவாய்கள் ரூ. 200 இலட்சத்திலிருந்து ரூ. 300 இலட்சமாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில், முதலீட்ட வருமானத்திலிருந்து பெற்ற பெருமளவு தொகை, வெளியே சென்றமைக்கு இலங்கையின் அதிகரித்துச் செல்லும் வெளிநாட்டுக் கடன் மீதான பெருமளவு வட்டிக் கொடுப்பனவுகளே காரணமாகும்.

மாற்றற் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழ் அதிகமானோர் கூடிய விரைவாகத் தாயகம் திருப்பியமையால், தனியார் கணக்கின் மீதான அதிகரித்த தொகை வெளிச்சென்றது. அரசாங்க மாற்றற் கொடுப்பனவுகளிலிருந்து பெற்ற வருவாய்கள், பண மூலமாகவோ அன்றிப் பொருட்கள் மூலமாகவோ வெளிநாடுகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் பெற்ற கொடைகளைக் காட்டுகின்றன. இவை, ரூ. 1,050 இலட்சத்திலிருந்து ரூ. 820 இலட்சமாகக் குறைவுற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

பணிக் கணக்குகளையும், மாற்றற் கொடுப்பனவுகளையும் ஒருமித்து நோக்கும்போது, இவற்றில் ரூ. 340 இலட்சம் கொண்ட மிகை ஏற்பட்டது. இது நடைமுறைக் கணக்கிலுள்ள பணக்குறையை ரூ. 2,690 இலட்சமாகக் குறைக்க உதவியது.

## அட்டவணை II (ஏ) 4

### 1971-இலும், 1972-இலும் பணிகள் கணக்கின் முக்கியமானதுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1972 (அ) | மாற்றம் | 1971 | 1972 (அ) | மாற்றம் | 1971 | 1972 (அ) |
| துறைமுகப் பணிகள், ஏற்றியிறக்கல், காப்புறுதி ... | 139 | 138 | — 1 | 43 | 45 | 2 | + 96 | + 95 |
| வெளிநாட்டுப் பயணம் ... | 20 | 32 | 12 | 15 | 13 | — 2 | + 5 | + 17 |
| முதலீட்டு வருமானம் ... | 13 | 12 | — 1 | 134 | 149 | 15 | — 121 | — 137 |
| (i) இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 1 | 1 | — | 30 | 29 | — 1 | — 29 | — 28 |
| (ii) வட்டி ... | 12 | 11 | — 1 | 104 | 120 | 16 | — 92 | — 109 |
| அரசாங்கச் செலவினம் ... | 35 | 40 | 5 | 24 | 28 | 4 | + 11 | + 12 |
| பல்வகைப் பணிகள் ... | 106 | 126 | 20 | 111 | 128 | 17 | — 5 | — 2 |
| தனியார் மாற்றல்கள் ... | 20 | 25 | 5 | 40 | 59 | 19 | — 20 | — 34 |
| மொத்தம் ... | 333 | 373 | 40 | 367 | 422 | 55 | — 34 | — 49 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**(இ) மூலதனக் கணக்கு**

*1972இல் நிதி உதவப்பட வேண்டிய மொத்த வள் இடைவெளி 1971இன் ரூ. 13,720 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 13,030 இலட்சமாக விளங்கியது. பண்ட, செயற்றிட்ட உதவி மூலம் பெற்ற நீண்ட தவணை மூலதனம் ரூ. 4,980 இலட்சத்திலிருந்து ரூ. 4,140 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. இத்தகைய கடன்களின் மீளக் கொடுப்பனவுகள் ரூ.960 இலட்சத்திலிருந்து ரூ.1,240 இலட்சமாக அதிகரித்தன. இதன் விளைவாக நீண்ட-தவணை அரசாங்க மூலதனமாகப் பெற்ற தேறிய தொகை ரூ. 4,020 இலட்சத்திலிருந்து ரூ. 2,090 இலட்சமாகக் குறைவுற்றது.*

### அட்டவணை II (ஏ) 5

### வெளிநாட்டு நிதிவள இடைவெளியை நிதியீட்டும் வழிமுறைகள் 1971—1972

| வழிமுறைகள் | 1971 | | 1972 (அ) | |
|---|---|---|---|---|
| | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு | ப. இ. ரூ. | சதவீதப் பங்கு |
| நிதிவள இடைவெளி . | — 1372 | | — 1303 | |
| நிதியீட்டல் ... | + 1372 | 100 | + 1303 | 100 |
| 1. வெளிநாட்டுச் சொத்துக்கள் .. | — 96 | — 7.0 | — 229 | — 17.5 |
| 2. வெளிநாட்டு வங்கிக் கடன்பாடுகள் ... | — | — | 12 | 0.9 |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 83 | 6.0 | 163 | 12.5 |
| 4. இருபுடை வணிக நிலுவைகள் ... | — 57 | — 4.1 | — 11 | — 0.8 |
| 5. குறுகியகால வணிகக் கொடுகடன்கள் .. | 658 | 48.0 | 593 | 45.6 |
| 6. நிரம்பல் செய்வோர் கொடுகடன் ... | 58 | 4.2 | 72 | 5.5 |
| 7. பண்ட உதவி ... | 260 | 18.9 | 317 | 24.4 |
| 8. செயற்றிட்ட உதவி ... | 86 | 6.2 | 97 | 7.5 |
| 9. ஏனைய கடன்களும், கொடுகடன் வழிகளும் ... | 152 | 11.0 | — | — |
| 10. கொடைகள் ... | 105 | 7.6 | 82 | 6.3 |
| 11. தனியார் மூலதனம் ... | 25 | 1.8 | 51 | 3.9 |
| 12. ஏனைய ... | 41 | 2.9 | 88 | 6.8 |
| 13. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 63 | 4.5 | 62 | 4.8 |
| 14. பிழைகளும், தவறுகளும் ... | — 6 | — | 6 | 1 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1973

நீண்ட - தவணை மூலதனமாகப் பெற்ற தேறிய தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டமையால், தவிர்க்கமுடியாத நிலையில் தொடர்ந்தும் குறுந் - தவணைக் கொடுகடன்களைப் பெறவேண்டியிருந்தது. இவ்வாண்டின்போது இவ்விதம் பெறப்பட்ட கொடுகடன்களின் மொத்தத் தொகை 1971இன் ரூ. 7,160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 665 இலட்சமாக விளங்கியது. ஆயினும், இத்தகைய கொடுகடன்களிலே திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை, ரூ. '6,790 இலட்சத்திலிருந்து ரூ. 6,200 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. ஆகவே, 1972ஆம் ஆண்டு வெளிநின்ற குறுந் தவணைக் கொடுகடன்களின் அளவு ரூ. 450 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1971இல் ரூ. 370 இலட்சமாக மட்டுமேயிருந்தமை ஒப்பிடத்தக்கது.

1972இல் ஏற்றுமதித் தளம்பல்களுக்கான நட்டஈட்டு நிதியுதவித்திட்டத்தின் கீழ் ரூ. 147 இலட்சத்து 50 ஆயிரம் கொண்ட ஐ. அ. டொலர்களை எடுப்பனவு செய்தமையாலும், சென்ருண்டின் துணைநில் ஒப்பந்தத்தின் கீழ் ரூ. 105 இலட்சம்கொண்ட ஐ. அ. டொலர்களை எடுப்பனவு செய்தமையாலும் பெறுகைகளின் மொத்தத் தொகை ரூ. 1,630 இலட்சமாக விளங்கியது. கொடுப்பனவுக் கட்டணங்களாகப் பன்னாட்டு நாணய நிதியில் மேலும் ரூ. 190 இலட்சம்கொண்ட தொகையொன்று ரூபாக்களில் வரவுவைக்கப்பட்டது. முன்னைய எடுப்பனவுகள் மீதான மீளக் கொடுப்பனவுகள் ரூ. 1,700 இலட்சமாக விளங்கின. ஆகவே, பன்னாட்டு நாணய நிதியில் பட்ட தேறிய கடன், 1971இன் ரூ. 410 இலட்சங்கொண்ட குறைப்பிற்கு மாறாக ரூ. 120 இலட்சத்தால் அதிகரித்தது.

சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் முதல் ஒதுக்கீட்டின் மூன்ருவது ஆண்டுத் தவணைப் பணத்தின் கீழ் இலங்கை ரூ. 620 இலட்சம் பெறுமதியுள்ள உரிமைகளைப் பெற்றது.

## 2. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள்

1972இல் சென்மதி நிலுவையில் பாதகமான விளைவுகள் ஏற்பட்டபோதும், இலங்கையின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ரூ. 1,870* இலட்சத்தால் அதிகரித்தன. மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் இருப்புச் சொத்துக்கள் முறையே ரூ. 470 இலட்சத்தாலும் ரூ. 1,350 இலட்சத்தாலும் அதிகரித்தன. அதேவேளையில் அரசாங்கத்தின் இருப்புச்சொத்துக்களும் ரூ. 50 இலட்சத்தால் அதிகரித்தன.

வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு சென்மதி நிலுவையிலேற்பட்ட முன்னேற்றத்தைக் காட்டவில்லையென்பதை வலியுறுத்த வேண்டும். இவ்வதிகரிப்பில் ரூ. 620 இலட்சம்கொண்ட தொகை சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீட்டைக் காட்டுகின்றது. மீதியான அதிகரிப்பைப் பொறுத்தவரை, வர்த்தக வங்கிகளின் ரூ. 680 இலட்சம் கொண்ட குறுகிய காலப் பொறுப்புக்களையும், அரசாங்கத்தின் குறுகிய காலப் பொறுப்புகளான ரூ. 460 இலட்சத்தையும் நாம் கவனத்துக்கு எடுக்கவேண்டும்.

* பின்னிணைப்பு 11, அட்டவணை 48ஐப் பார்க்கவும்.